# சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திற்கு அஆ...உஊ... கற்றல் பயணம்

மேல் தொடக்கநிலைக்கான தமிழ்க் கற்றல் பயணம்



## ஆசிரியர்களுக்கான வழிகாட்டிக் கையேடு

விலங்கியல் தோட்டத்திற்கு வருகை புரிவதற்கு முன்பாகவும், விலங்கியல் தோட்டத்திற்கு வந்த பின்னரும், விலங்கியல் தோட்டத்திற்கு வருகை புரிந்துசென்ற பின்னரும், பிள்ளைகளுக்கு எத்தகைய நடவடிக்கைகளை நடத்தலாம் என்பது பற்றியும், இந்த நடவடிக்கைகளின் வழி பிள்ளைகளை அன்றாட வாழ்க்கையில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு எவ்வாறு ஊக்குவிப்பது என்பது பற்றியும், இந்த பயண கையேட்டின் மூலமாக தெரிந்துகொள்ளலாம். சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்தில் இருக்கும் நீர்க்கீரி, யானை மற்றும் புலி ஆகிய விலங்குகளைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதன் மூலம் தமிழில் அவர்கள் பயிற்சி எடுத்துக்கொள்ள இயலும். இந்த கற்றல் வளங்களில், விலங்குகளைச் சார்ந்த விளையாட்டுகளுடன், மொழித்திறன்களான கேட்டல், எழுதுதல், பேசுதல் மற்றும் கூர்ந்து கவனித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

கீழ் தொடக்கநிலை மற்றும் மேல் தொடக்கநிலை மாணவர்களுக்கென வரையறுக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களை உங்களுடைய மாணவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கலந்தோ அல்லது ஒன்றை மற்றொன்றுடன் மாற்றியோ உங்களது விருப்பப்படி பாடத்திட்டங்களை வடிவமைத்துக் கொள்ளலாம்.

வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, வகுப்பறையிலோ நமது விலங்கியல் தோட்டத்திலோ மேற்கொள்ளலாம்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்திற்கு முன்பான நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 1: நீர்க்கீரிகள் விளையாடும் நேரம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்: • கேட்டல் • கூர்ந்து கவனித்தல் • பேசுதல்**

### உறைதலும் நகர்தலும்

உறைதலும் நகர்தலும் நடவடிக்கையில் கலந்துகொள்ள வகுப்பிலுள்ள மாணவர்களை ஊக்குவியுங்கள். பாதுகாப்பான தூர இடைவெளிக்கான விதிகள் நடப்பிலிருப்பின் மாணவர்கள் அவற்றைச் சரியாகப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள். வகுப்பில் எந்த தடையுமின்றி மாணவர்கள் நடக்க அவர்களை ஊக்குவியுங்கள். அதன் பிறகு, நீங்கள் 'உறைந்துவிடு' என்று சொல்லும்போது அவர்கள் தங்களுக்கு பிடித்த விலங்காக பாவனை செய்து நிற்க வேண்டும். மாணவர்களை நகர செய்வதற்கு, ஒவ்வொருவராக அவர்களுடைய தோளைத் தட்டவேண்டும். ஒரு மாணவரின் தோளைத் தட்டும்போது, அம்மாணவர் தனக்குப் பிடித்த விலங்கைப் பற்றி, அவ்விலங்கின் பெயரைக் குறிப்பிடாமல் குறைந்தது மூன்று வாக்கியங்களைச் சக மாணவர்களிடம் கூறி, அந்த விலங்கு என்னவென்று அனைவருக்கும் ஊகிக்க வழி செய்ய ஊக்குவிக்கப்படுவர்.

அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த சொற்களைப் பயன்படுத்த மாணவர்களை ஊக்குவியுங்கள். அதோடு, அவர்களுடைய மொழித்திறனுக்கு ஏற்ற நிலையில் உள்ள சில புதிய சொற்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். ஒரு மாணவரை ஆசிரியர் நகரச் சொல்லும்போது, அம்மாணவர், 'எனக்கு கூர்மையான பற்களும் நகங்களும் உள்ளன, எனக்கு மாமிசம் உண்ணப் பிடிக்கும், என் உடம்பில் நிறைய வரிக்கோடுகள் உள்ளன' என்று கூறலாம்.

© Singapore Zoo 2020

நீர்க்கீரியைப் போல பாவனை செய்து, பின்வரும் வாக்கியங்களை வகுப்பு மாணவர்களுக்கு ஊகமாகக் கொடுத்து விளையாட்டை நிறைவு செய்யவும். எ.கா. எனக்கு நீண்ட வால் உண்டு. எனக்கு நான்கு சிறிய நகங்கள் உள்ளன. நான் நன்றாக நீந்துவேன். எனக்கு மீன் சாப்பிட பிடிக்கும். சிங்கப்பூரின் ஆறுகளில் நீங்கள் என்னைக் காணலாம்.

இந்த காணொளியை மாணவர்களுக்குக் காட்டி, சிறு குழுக்களில் பின்வரும் நடவடிக்கைகளை சவாலாக நிறைவேற்றுமாறு கூறுங்கள்

1) காணொளியில் நீர்க்கீரிகள் செய்யும் நடவடிக்கைகளை வர்ணிக்கும் வினைச்சொற்களுடன், பத்து வாக்கியங்களை உருவாக்க வேண்டும்.

2) காணொளியில் நீர்க்கீரிகளின் உடல் அம்சங்களை வர்ணிக்கும் பெயரடைகளைக் கொண்ட ஐந்து வாக்கியங்களை உருவாக்க வேண்டும்.

3) விலங்கியல் தோட்ட காப்பாளர், நீர்கீரிகளை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க, உணவு வகைகள் சேர்க்கப்பட்டுள்ள இப்பை போன்ற செறிவூட்டும் விளையாட்டுப் பொருட்களைக் கொடுப்பார்கள் என்று வகுப்பு மாணவர்களுக்குத் தெரிவிப்பதற்கு முன்னராக, தாங்கள் பார்ப்பவற்றை வைத்து பின்வரும் வாக்கியத்தை மாணவர்களை நிறைவேற்ற சொல்லுங்கள். 'நீர்க்கீர்கள்...பையுடன்...இவ்வாறு செய்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம்...ஏனெனில்...'

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2: நீர்க்கீரிகள் விளையாடும் நேரம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 6**

**திறன்கள்: • கூர்ந்து கவனித்தல் • பேசுதல் • எழுதுதல்**

### நீர்க்கீரியின் காட்சி

- இந்தக் காணொளியைப் பாருங்கள். சிறிய குழுக்களில் மாணவர்களை ஒன்றாக இணைத்து, காணொளிக்குப் பின்னணி குரலாக பயன்படும் சிறிய விளக்கவுரை ஒன்றை எழுதச் சொல்லுங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் விளக்கவுரையாளர் ஒருவரை தேர்வுசெய்ய சொல்லுங்கள். அவர்கள் எழுதிய விளக்கவுரையை வாய்மொழியாக ஒவ்வொரு விளக்கவுரையாளரும் ஒப்பிக்க, காணொளியைப் போட்டுக் காட்டுங்கள்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்திற்கு முன்பான நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: கிளிப் பேச்சு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்:** • சொல்வள மேம்பாடு • ஆழமாக சிந்தித்தல் • பேசுதல் • உருவாக்குதல்

### பார், நினை, சிந்தி

- கற்றல் வளக் கையேட்டில் உள்ள ஆண் மற்றும் பெண் இக்லெக்டஸ் கிளிகளின் புகைப்படங்களை மாணவர்களிடம் காட்டி அவற்றைக் கூர்ந்து கவனிக்கச் சொல்லுங்கள்.

- சிறிய குழுக்களில், இக்கிளி குறித்து அவர்களால் எத்தனை கேள்விகளைச் சிந்திக்க முடியுமோ, அத்தனையையும் அவர்களால் இயன்ற அளவிற்கு எழுதி, அக்கேள்விகளையும் வினாக்களையும் பார்-நினை-சிந்தி கட்டத்தில் இருக்கும் தலைப்புகளுக்கு ஏற்றவாறு பிரித்து எழுத சொல்லுங்கள்.

மாதிரிகள்:

| பார் | நினை | சிந்தி |
|---|---|---|
| இக்கிளியில் எத்தனை நிறங்களை நம்மால் பார்க்க முடிகிறது?<br><br>எந்தெந்த நிறங்களை நம்மால் பார்க்க முடிகிறது?<br><br>எந்த... | இந்தச் சுற்றுச்சூழல் குறித்து நீ என்ன நினைக்கிறாய்?<br><br>அந்தக் கிளி உயரமான மரக்கிளையின் மீது அமர்ந்திருப்பதற்கான காரணம் என்னவென்று நீ நினைக்கிறாய்?<br><br>நீ எவ்வாறு நினைக்கிறாய்... | ஆண் மற்றும் பெண் இக்லெக்டஸ் கிளிகளுக்கு வெவ்வேறு நிறத்திலான இறகுகள் இருப்பது ஏன் என்று நான் சிந்திக்கிறேன்.<br><br>...எப்படி என சிந்திக்கிறேன். |

© Singapore Zoo 2020



Eclectus Parrot (female)

© Singapore Zoo 2020



Eclectus Parrot (male)

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2: கிளிப் பேச்சு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 6**

**திறன்கள்: • பேசுதல் • தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைக் கையாளுதல்**

### கிளியின் அரட்டை

- இக்லெக்டஸ் கிளிகள், அதிகம் பேசக்கூடிய, பிறரைப் போல சிறப்பாக பாவனை செய்து நடித்துக்காட்டக்கூடிய கிளிகளாகும். இந்தக் காணொளியை வகுப்பிற்கு போட்டுக் காட்டி, இக்லெக்டஸ் ஜோடிக்கிளிகளை கூர்ந்து கவனிக்குமாறு மாணவர்களிடம் கூறுங்கள்.

- இருவர் அடங்கிய குழுக்களில் மாணவர்களைப் பிரித்து, இரண்டு கிளிகளுக்கு இடையே கற்பனையான உரையாடல் ஒன்றை உருவாக்கச் சொல்லுங்கள். அந்த உரையாடலை எழுதி, அக்கிளிகள் அதை எவ்வாறு பாவனை செய்யக்கூடும் என்பதை வகுப்பின் முன்பாக நடித்துக்காட்ட ஊக்குவியுங்கள்.

- இருவரும் படைப்பதை, பள்ளி ஐபேட் போன்ற மின்னியல் சாதனங்களில் பதிவு செய்ய நீங்கள் அவர்களிடம் கூறலாம்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: புத்திசாலியான சருகுமான்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்: • பேசுதல் • சொல்வளம்**

### உவமைகள், உவமைகள், உவமைகள்

- நீளமாக, ஊசி போன்று மிகக் கூர்மையான இரண்டு நீளமான முன் பற்களைச் சருகுமான்கள் கொண்டிருக்கும். சண்டை போடும்போது, அப்பற்களை அவைப் பயன்படுத்தும். சருகுமானின் படத்தைப் உற்றுப் பார்க்கும்போது உங்களுக்கு வேறு என்ன தென்படுகின்றது?

- சருகுமானின் புகைப்படத்தையும், முதலையின் புகைப்படத்தையும் அமைதியாக முப்பது வினாடிகளுக்கு மாணவர்களைக் கூர்ந்து கவனிக்க வையுங்கள்.

- மாணவர்களை இரண்டு குழுக்களாக பிரித்துவிடுங்கள்; ஒரு குழு சருகுமானைப் பிரதிநிதிக்கும் மற்றொன்று முதலையை பிரதிநிதிக்கும். அவர்களால் இயன்றவரை, சருகுமான் மற்றும் முதலையின் வெவ்வேறு உடல் அம்சங்களை வேறு மாதிரியான பொருட்களுடன் ஒப்பீடு செய்யும் உவமைகளை உருவாக்கும் சவாலை அவர்களுக்குக் கொடுங்கள்.

நீங்கள் சில உதாரணங்களைப் பயன்படுத்த விரும்பலாம்

— சருகுமானின் கால்கள் சருகைப் போல மெல்லியதாக உள்ளன.

— முதலையின் பற்கள் ரம்பத்தைப் போல கூர்மையாக உள்ளன.

© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020



Estuarine Crocodile

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2:
## நீர்க்கீரிகள் விளையாடும் நேரம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்: • கேட்டல் • கருத்தறிதல் • பேசுதல்**

### கதைச் சவால்

- சங் கன்சிலை புத்திசாலியான சருகுமானாகவும், முதலையைப் பேராசைப் பிடித்த, அறிவற்ற விலங்காகவும் அறிமுகம் செய்யவும். பின்னர், சருகுமானும் முதலையும் என்ற கதையின் முதல் பத்தியை உரக்க வாசித்துக் காட்டவும்.

- கதையை இங்கு நிறுத்தி, சிறு குழுக்களாக மாணவர்களைப் பிரித்து அக்குழுக்களில் கலந்துரையாடி சங் கன்சிலை அக்கரைக்குப் பாதுகாப்பாக கொண்டு சேர்ப்பதற்கான வழியைச் சிந்திக்கச் சொல்லுங்கள். இந்த வழியையும், முதலை, சருகுமான் மற்றும் பிற கூடுதலான கதாபாத்திரங்களுடனான உரையாடல்களையும் மாணவர்களை எழுத சொல்லுங்கள். அவர்களுக்கு ஏற்கனவே உண்மையான கதை தெரிந்திருந்தால், மாறுபட்ட யோசனைகளைச் சிந்திக்கச் சொல்லுங்கள்.

- அவர்களுடைய சொந்த யோசனைகளை நடித்துக் காட்ட குழுக்களுக்கு ஊக்கம் அளியுங்கள். குழு உறுப்பினர்கள் ஒரு கதைசொல்லியை நியமிக்க வேண்டும். அதே வேளையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேசும் பாத்திரம் இருப்பதை அவர்கள் உறுதி செய்யவேண்டும். அதன் பிறகு, மாணவர்கள் ஒவ்வொரு வாக்கியமாக ஒன்றன் பின் ஒன்றாக

© Singapore Zoo 2020

# சருகுமானும் முதலையும்

ஒரு நாள் ஆற்றங்கரையோரமாக நடந்து சென்றுகொண்டிருந்த போது, ஆற்றின் மறுபக்கம் இருந்த ருசியான பழங்களைச் சாப்பிடும் ஆசை சங் கன்சிலுக்கு ஏற்பட்டது. ஆனால் அந்த ஆற்றில் நிறைய முதலைகள் பசியுடன் இருந்தன. அவை, சங் கன்சில் எப்போது ஆற்றைக் கடப்பான் நாம் எப்போது அவனைக் கொன்று சாப்பிடலாம் என்ற எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

சங் கன்சிலுக்கும் ஓர் அருமையான யோசனை தோன்றியது.

சங் கன்சில் "சங் புயா... சங் புயா..." என்று கூவி முதலையை அழைத்தது. அதைக் கேட்ட முதலை "சொய்ங்... சொய்ங்... சொய்ங்" என்று நீந்திக்கொண்டு சங் கன்சில் அருகே வந்து "என்ன சங் கன்சில்? எதுக்கு கூப்பிட்ட? உன்னை சாப்பிடவா?" என்று கேட்டு சிரித்தது.

"ஊஹூம், சிரிப்பே வரல எனவும் மன்னிக்கவும், இன்று இல்லை," என்று பதில் அளித்தது சங் கன்சில். "ராஜா ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செஞ்சிருக்காரு, காட்டுல இருக்குற எல்லா மிருகத்தையும் அழைத்து வரச் சொன்னாரு. இந்த பெரிய விருந்துக்கு எத்தனை முதலைங்க வரும்னு எனக்கு தெரியனும்."

"சரி, நான் மத்த முதலைங்க கிட்ட கேட்டுட்டு சொல்லுறேன்" என்று சங் புயா சொன்னது. "அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்லை, எல்லா முதலைகளையும் கூப்பிட்டு இந்த கரையிலேத்து எதிர் கரை வரைக்கும் ஒண்ணு பின்னாடி ஒண்ணா நிக்கச் சொல்லு, நான் இப்போவே உங்க எல்லாரையும் எண்ணிட்டு போறேன்" என்று கூறியது.

© Singapore Zoo 2020

சங்புயாவிற்கு சங் கன்சில் கூறியது சரியா தவறா என்று புரியவில்லை. இருப்பினும், ராஜா வீட்டு விருந்திற்கு அழைத்தது அதற்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்தது. எனவே, சங் கன்சில் சொன்னது போல எல்லா முதலைகளையும் வரிசையாக நிற்க வைத்தது சங் புயா.

“எல்லாரும் வந்துட்டோம்! நீ எண்ணலாம்!” என்று சொன்னது சங் புயா.

“ஆங்! நீ என்ன சாப்பிட மாட்டேன் என்று உறுதி சொன்னாதான் நான் எண்ணுவேன். இல்லைன்னா எத்தனை முதலைங்க விருந்துக்கு வருதுன்னு என்னால ராஜாகிட்ட தகவல் தெரிவிக்க முடியாம போயிடும்” என்றது சங் கன்சில்.

“நான் வாக்கு தரேன், கண்டிப்பா சாப்பிட மாட்டேன்,” என்று சொன்னது சங் புயா.

உடனே சங் கன்சில் முதலைகளின் முதுகுகளில் ஏறி குதித்து, ஒரு முதலையிலிருந்து அடுத்த முதலைக்கு குதித்தவண்ணம் “ஒண்ணு... ரெண்டு... மூணு...” என்று எண்ணியபடி அடுத்த கரையை அடைந்தது.

“எண்ணி முடிச்சுட்டியா?,” என்று கேட்டது முதலை.

“ஆமாம். ஆனா, விருந்துமில்ல ஒண்ணுமில்ல, ஹாஹாஹா!” என்று சிரித்தபடி காட்டுக்குள்ளே இருக்கும் பழ மரங்களை நோக்கி விரைந்து ஓடியது சங் கன்சில்.

சங் கன்சில் மீண்டும் தனது எதிரியை ஏமாற்றிவிட்டது. அடுத்த முறை ஆற்றைக் கடக்க சங் கன்சில் வரும்போது அதைச் சாப்பிட்டே தீருவேன் என்ற கோபத்துடன் முதலை இருந்தது.

© Singapore Zoo 2020



# நீர்க்கீரி

## பாடத்திற்கான யோசனை 1:
## கண்ணாடி விளையாட்டு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்: • கூர்ந்து கவனித்தல் • பேசுதல் • புத்தாகச் சிந்தனை • சொல்வளம்**

- கண்காட்சியில் உள்ள நீர்க்கீரிகளையோ, அல்லது கற்றல் வளக்கையேட்டில் உள்ள நமது நீர்க்கீரிகளின் புகைப்படத்தையோ கூர்ந்து கவனிக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்.

- கண்காட்சியிலோ, புகைப்படத்திலோ உள்ள நீர்க்கீரியைப் போலவோ அல்லது ஒரு பொருளைப் போலவோ மாணவர்களை மாறி மாறி பாவனை செய்து காட்டச் சொல்லுங்கள். மற்ற மாணவர்கள் அவர்கள் எதைப் போல பாவனை செய்கிறார்கள் என்பதை ஊகித்து கண்டுபிடிப்பார்கள். எ.கா, ஒரு மாணவர், தன்னுடைய உடலையும் கைகளையும் கொண்டு கண்காட்சியிலோ புகைப்படத்திலோ உள்ள மரத்தைப் போல பாவனை செய்யக்கூடும்.

- இந்நடவடிக்கையை இருவர் அடங்கிய குழுக்களாக மாணவர்களைப் பிரித்தும் மேற்கொள்ளலாம்.

© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2: கண்மூடி வரைதல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்: • பேசுதல் • புரிந்துகொள்ளுதல்/கற்றவற்றைப் பயன்படுத்துதல்**

- இருவர் அடங்கிய குழுக்களாக மாணவர்களை செயலாற்ற சொல்லுங்கள்; அதில் ஒருவர் விவரிப்பவராகவும் ஒருவர் வரைவபராகவும் இருக்கவேண்டும். விவரிப்பவர்கள், நீர்க்கீரி கண்காட்சியையோ, நீர்க்கீரியின் புகைப்படத்தையோ பார்த்த வண்ணம் நிற்கவேண்டும். வரைபவர்களை, நீர்க்கீரி கண்காட்சியையோ அல்லது புகைப்படத்தையோ பார்க்காமல் திரும்பி நிற்கச் செய்யுங்கள்.

- கற்றல் வளக் கையேட்டில் உள்ள ஆசியாவின் சிறிய நகமுள்ள நீர்க்கீரியின் புகைப்படத்தை நீங்கள் பயன்படுத்திகொள்ளலாம்.

- விவரிப்பவர்கள், குறைந்தது ஒரு நீர்க்கீரி மற்றும் அதன் சுற்றுச்சூழல் ஆகியவற்றை வரைபவர்களுக்கு வர்ணித்து, வரைபவர்கள் அமைதியாக ஐந்து நிமிடங்களில் அந்த வர்ணனைகளை வரைந்துகாட்டும் சவாலை மாணவர்களுக்கு அளியுங்கள்.

- விவரிப்பவர்கள், அவர்களுடைய வர்ணனைகளை இயன்றவரை தெளிவாகவும், எளிதில் கற்பனை செய்து பார்க்க இயலக்கூடியதாகவும் இருக்கும்வண்ணம் கூறச்சொல்லி ஊக்குவியுங்கள். எ.கா. நம்மை விட இரண்டு மடங்கு உயரமான மரத்தின் கீழ் அது உறங்கிக்கொண்டிருக்கின்றது. அதன் வால் நீளமானது. அந்த வால், அதன் உடலளவு நீளமாக உள்ளது.

© Singapore Zoo 2020

மூன்று நிமிடங்கள் முடியும்போது, இருவரும் கண்காட்சியையோ புகைப்படத்தையோ பார்வையிட்டு, நீர்க்கீரியின் அனைத்து உடல் அம்சங்களும் அதன் சுற்றுச்சூழலும் சரியாக வரையப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்க இயலும்.

சிந்தனையைத் தூண்டும் இக்கேள்விகளுடன், 'கண்மூடி' வரைந்த அனுபவத்தைக் குறித்து மாணவர்களைப் பேச வையுங்கள்:

- 'கண்மூடி' வரைதல் நடவடிக்கையின் போது நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்? அவ்வாறு உணர்ந்ததற்கான காரணம் என்ன?
- எந்த உடல் அம்சம் வரைவதற்கு ஆகக் கடினமாக இருந்தது? ஏன்?
- வரைபவரின் வேலையை எளிதாக்க, நீங்கள் எந்த சொற்களைப் பயன்படுத்தினீர்கள்?

© Singapore Zoo 2020



# Otter

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 3: ரிவர்ஸ் சரேட்ஸ்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 6**

**திறன்கள்: • வாசித்தல் • புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்வது • பேசுதல்**

- நீர்க்கீரிகளை அதன் நிலக் கண்காட்சியிலோ அல்லது நீருக்கடியில் உள்ள கண்காட்சியிலோ கூர்ந்து கவனியுங்கள், அல்லது இந்த காணொளியைப் பாருங்கள். மாணவர்களை சிறிய குழுக்களாகப் பிரித்து, அவர்கள் கவனித்தவற்றின் அடிப்படையில் மூன்று சிறு வாக்கியங்களை எழுதச் சொல்லுங்கள்.

- மொழித்திறனில் வெவ்வேறு நிலைகளில் உள்ள மாணவர்களுக்கு ஏற்றவாறு, கடினத்தன்மையில் மாறுபடும் சில வாக்கியங்களை நீங்கள் பகிர்ந்துகொள்ளலாம். எ.கா. 'நீர்க்கீரிகளுக்கு விளையாடவும் பேசவும் பிடிக்கும்' அல்லது 'நீர்க்கீரிகளுக்கு விளையாடவும், மல்லுக்கட்டவும், நீருக்கடியில் அக்ரோபாடிக்ஸ் புரியவும் பிடிக்கும்'.

- மற்றொரு குழுவுடன் மாணவர்கள் தாங்கள் உருவாக்கிய வாக்கியங்களைப் பரிமாற்றம் செய்து பகிர்ந்துகொண்டு, ரிவர்ஸ் சரேட்ஸ் விளையாடவேண்டும்; அதாவது பகிர்ந்துகொள்ளப்பட்ட அந்த வாக்கியங்களை ஒரு குழு உறுப்பினர் ஊகிக்க மற்ற அனைவரும் நடித்துக் காட்டவேண்டும்.

## கற்றல் பயணத்தின்போது செய்யும் நடவடிக்கைகள்



# இக்லெக்டஸ் கிளி

### பாடத்திற்கான யோசனை 1:
### வண்ணத் தட்டு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4**

**திறன்கள்: • உற்று நோக்கல் • பேசுதல் • புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்வது**

- சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்தில் உள்ள 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'ஐ சென்று பாருங்கள், அல்லது இந்தக் காணொளியைப் பாருங்கள். இக்லெக்டஸ் கிளிகளில், ஜோடிக்கிளிகளை அடையாளம் காண உங்களுடைய வகுப்பு மாணவர்களை ஊக்குவியுங்கள். ஒவ்வொரு மாணவரையும், அவர்கள் பார்த்த ஒரு கிளியையாவது வரைந்து, அவர்கள் கவனித்த அனைத்து வண்ணங்களையும் அடையாளம் கண்டு, வரைந்த படத்தில் குறியிடச் சொல்லுங்கள்.

- இருவர் அடங்கிய குழுக்களில் மாணவர்கள், கிளிகளின் இறகுகளையும் உடல் அம்சங்களையும் மாற்றும் சக்தி அவர்களுக்கு இருந்தால் அவர்களுடைய கிளிகள் எந்தெந்த நிறங்களைக் கொண்டிருப்பதை விரும்புவார்கள் என்பதை கலந்தாலோசிக்கலாம்.

- அவர்களின் நிறத் தேர்வுக்கான காரணங்களைத் தங்களுடைய குழு உறுப்பினருக்கு எடுத்துக்கூறவதோடு, அவர்களுடைய புது கிளிக்கு மாணவர்கள் பெயர் சூட்டவும் வேண்டும்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது செய்யும் நடவடிக்கைகள்

## பாடத்திற்கான யோசனை 2: வனக் கதைகள்




**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்:**
- **தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை கையாளுதல்**
- **புத்தாக்கத்தன்மையுடன் எழுதுதல்**
- **பேசுதல்**


மாணவர்களை இருவர் அடங்கிய குழுக்களாக பிரித்து, 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'ல் பதினைந்து நிமிடங்கள் சுற்றிப் பார்க்கச் சொல்லுங்கள். அதன்வழி, அவர்கள் காணும் மூன்று விலங்குகளையாவது வரைந்து, அல்லது புகைப்படம் பிடித்து, அல்லது ஒலி/ஒளிப்பதிவு செய்யவேண்டும்.

கண்காட்சியில் உள்ள தகவல் பலகைகளிலிருந்து மாணவர்கள் அவர்கள் தெரிவுசெய்த விலங்குகளின் பெயர்களைக் கண்டறிந்துகொள்ளலாம். மூன்று விலங்குகளையும் உள்ளடக்கிய சிறிய கதை ஒன்றை அவர்கள் ஒலிப்பதிவு செய்யலாம். அக்கதைக்கு அவர்கள் பின்வரும் தொடக்க வரியைப் பயன்படுத்தலாம்: "காட்டு வழியே மூன்று நண்பர்களும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது..."

இந்த பாடத்தை நீங்கள் பள்ளியில் நடத்தினால், 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'லிருந்து ஒவ்வொரு மாணவரும் ஐந்தில் மூன்று விலங்கு புகைப்படங்களைத் தேர்வு செய்ய சொல்லலாம். அவர்கள் தேர்வுசெய்யவிருக்கும் விலங்குகள் குறித்து அவர்கள் இணையத்தில் சில ஆய்வுகளையும் மேற்கொள்ள விருப்பப்படலாம்.









© Singapore Zoo 2020







மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களை வைத்தோ, இணையத்தில் உள்ள புத்தகத்தை உருவாக்கும் செயலியை வைத்தோ, சிறிய புத்தகம் ஒன்றை உருவாக்க மாணவர்களை ஊக்குவியுங்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த மூன்று மிருகங்களையும், புத்தாக்கத்தன்மையுடன் அவர்கள் எழுதவிருக்கும், பின்வரும் புனைவு தொடக்கவரிகளில் ஒன்றில் தொடங்கும் படைப்பில் இடம்பெறச் செய்யுங்கள்.

— காட்டில் தாங்கள் எவ்வாறு சந்தித்தார்கள் என்பதை மூன்று நண்பர்களும் நினைவுகூறுகிறார்கள்...

— மூவரும் நண்பர்களாக இருந்தார்கள், ஆனால் இப்போது அவர்கள்...

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 3:
## கதை வட்டம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 6**


**திறன்கள்:**
- **புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்வது**
- **பேசுதல்**

- சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திலுள்ள 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'ஐ பதினைந்து நிமிடங்களுக்குச் சுற்றிப்பார்க்க மாணவர்களுக்கு அனுமதி அளியுங்கள். அல்லது, இந்தக் காணொளியைப் பாருங்கள். குறைந்தது மூன்று மிருகங்களின் சுற்றுச்சூழலையும் நடவடிக்கைகளையும் உங்களுடைய மாணவர்களைக் கூர்ந்து கவனிக்கச் சொல்லுங்கள்.

- வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை சிறியதாக இருந்தால் அவர்களை ஒரு பெரிய குழுவில் ஒன்றாக செயல்பட சொல்லுங்கள். வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை பெரியதாக இருந்தால் மாணவர்களைச் சிறு குழுக்களாக பிரித்து செயல்பட சொல்லுங்கள்.

- ஒரு வரியுடன் கதையைத் தொடங்கி, ஒவ்வொரு மாணவரும் கதைக்கு ஒரு வரியை சேர்க்குமாறு ஊக்குவியுங்கள். நீங்கள் கதையை இந்த வரியுடன் தொடங்கலாம் - 'பச்சைக் கிளியும் சிவப்பு கிளியும் பறக்கும் நரிக்குப் பக்கத்திலுள்ள மரக்கிளையில் அமர்ந்தன'. உங்களுடைய மாணவர்கள் இத்தகைய வாக்கியங்களைக் கூறி தத்தம் கதைகளை உருவாக்கலாம் - 'பறக்கும் நரி எவ்வாறு தலைகீழாக தொங்குகிறது என்பதைத் தெரிந்துகொள்ள கிளி ஆர்வமாக இருந்தது' & 'அது பறக்கும் நரியிடம் கேட்டது...'

- மாணவர்களுக்கு திடீரென எந்த வரியும் மனதில் தோன்றவில்லை என்றால், அவர்களால் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட, நகைச்சுவையான வரி ஒன்றைக் கூறமுடியும் என்பதை அவர்களுக்குத் தெரியபடுத்துங்கள் எ.கா. அய்யோ மறந்துட்டேனே, போச்சுடா.





© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020


Eclectus Parrot




© Singapore Zoo 2020



# சருகு மான்

## பாடத்திற்கான யோசனை 2: விண்வெளி மனிதர்களுடனான உரையாடல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்: • உற்று நோக்குதல் • சொல்வளத்தை மேம்படுத்துதல் • எழுதுதல்**

- 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'க்குச் சென்று, சருகுமானை அமைதியாக கூர்ந்து கவனிக்கும் இடங்களைக் கண்டறியுங்கள். அல்லது, இந்தக் காணொளியைப் பாருங்கள்.

- மாணவர்களை இருவர் அடங்கிய குழுக்களாக பிரித்து, விண்வெளி மனிதர் ஒருவருக்கு அஞ்சல் அட்டையில் சருகுமானைக் குறித்து எழுதச் சொல்லுங்கள். ஒரு விண்வெளி மனிதர் சருகுமானை அடையாளம் காண உதவும் மூன்றிலிருந்து ஐந்து வாக்கியங்களை அவர்கள் எழுதவேண்டும். எ.கா.

அன்புள்ள விண்வெளி மனிதருக்கு,

சருகுமான் எலியும் அல்ல மானும் அல்ல.

அதற்கு மிகவும் மெலிதான கால்கள் உள்ளன.

அவற்றின் கண்கள் கறுப்பு பளிங்கு போன்றவை.

- சற்று மேம்பட்ட மொழித்திறனைக் கொண்ட மாணவர்கள் சருகுமானை அடையாளம் கண்டுகொள்வதற்கான கையேட்டைத் தயாரிக்கக்கூடும். பின்வரும் வாக்கியத்தை முடித்து, அவர்கள் அந்தக் கையேட்டை எழுதத் தொடங்கலாம்.

*'நீங்கள் ______போது அது ஒரு சருகுமான் என்பதை அறிந்துகொள்வீர்கள்'*

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2: வல்லுனர்களின் பதவி ‘மேண்டல் ஆஃப் தி எக்ஸ்பர்ட்


**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்: • பேசுதல் • சீர்தூக்கிப்பார்த்தல் • உருவாக்குதல்**

- சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திலுள்ள ‘பிரைஜைல் ஃபோரஸ்ட்’ஐ பதினைந்து நிமிடங்களுக்குச் சுற்றிப்பார்க்க மாணவர்களுக்கு அனுமதி அளியுங்கள். அல்லது, இந்தக் காணொளியைப் பாருங்கள். மாணவர்களுக்குப் பிடித்த விலங்கினைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள்.

- 5 மாணவர்களைக் கொண்ட வல்லுனர்க் குழுவை, அதாவது ஆங்கிலத்தில் ‘மேண்டல் ஆஃப் தி எக்ஸ்பர்ட்’ஐ அமைக்க மாணவர்களை அழையுங்கள். இது, கற்பனையான சூழ்நிலைகளைக் கொண்டு கற்றலுக்கான அர்த்தமுள்ள, சுவாரசியமான முறையில் மாணவர்கள் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகளை உருவாக்கப் பயன்படும் ஒரு கல்வி அணுகுமுறையாகும்.

- நான்கு அல்லது ஐந்து மாணவர்கள் கொண்ட சிறிய குழுக்களில் மாணவர்களைப் பிரித்து, குழு உறுப்பினர்களை தலைவர் ஒருவரை நியமிக்கச் சொல்லுங்கள். அத்தலைவர், ‘பிரைஜைல் ஃபோரஸ்ட்’ல் வாழும் விலங்குகள் எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளார்கள் என்பதைக் கண்டறிய சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்தால் அமர்த்தப்படும் வல்லுனரின் பொறுப்பை வகிப்பார். பிற குழு உறுப்பினர்கள், ‘பிரைஜைல் ஃபோரஸ்ட்’ல் தங்களுக்கு பிடித்த மிருகத்தின் பாத்திரத்தை ஏற்றுக்கொள்வார்கள்.







© Singapore Zoo 2020

மாணவ வல்லுனர், அவர்கள் தயாரித்த கேள்விகளுக்கும் மேலாக, பரிந்துரைக்கப்பட்ட இக்கேள்விகளையும் கேட்பதைக் கருத்தில் கொள்ளலாம்:

1) இங்கு வசிப்பது குறித்து உங்களுக்கு என்ன பிடித்திருக்கிறது?
2) பலதரப்பட்ட விலங்குகளுடன் வசிப்பிடத்தைப் பகிர்ந்துகொள்வது பற்றி நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள?
3) நீங்கள் எதிர்கொள்ளும் சில சவால்கள் என்ன?
4) இங்கு நிம்மதியாக வாழ நீங்கள் எவற்றையெல்லாம் விட்டுக்கொடுக்கவேண்டியதாக உள்ளது?

மாணவ வல்லுனர், 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'ன் விலங்கு குடியிருப்பாளர்களின் பதில்களை எழுத்திலோ அல்லது மின்னியல் சாதனத்திலோ பதிவு செய்வார். அவர், தான் கண்டறிந்தவற்றின் சுருக்கத்தை வகுப்பின் முன்னர் படைத்துக் காட்டுவார்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது செய்யும் நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: நான் ____வாக இருந்தால்...

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4**

**திறன்கள்:**
- **புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்வது**
- **கற்றவற்றைப் பயன்படுத்துதல் மற்றும் சீர்தூக்கிப் பார்த்தல்**

- சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திலுள்ள 'பிரைஜைல் ஃபோரஸ்ட்'ஐ பதினைந்து நிமிடங்களுக்குச் சுற்றிப்பார்க்க மாணவர்களுக்கு அனுமதி அளியுங்கள். அல்லது, இந்தக் காணொளியைப் பாருங்கள்.

- இருவர் அடங்கிய மாணவர் குழுக்களில், 'பிரைஜைல் ஃபோரஸ்ட்' காட்டிற்கு எந்த விலங்கு அரசனாக்கப்படவேண்டும் என்ற கேள்விக்கு விடை காண அவர்களை கலந்துரையாட சொல்லுங்கள்.

- 'பிரைஜைல் ஃபோரஸ்ட்' காட்டிற்கு எந்த விலங்கு அரசனாக்கப்படவேண்டும் என்பது குறித்த அவர்களுடைய யோசனைகளை, சிறிய குழுக்களில் மாணவர்களை பகிர்ந்துகொள்ள சொல்லுங்கள். மாறாக, பின்வரும் வாக்கியங்களை முடிக்கச்சொல்லுங்கள்.

*"'பிரைஜைல் ஃபோரஸ்ட்' காட்டிற்கு நான் அரசனாக இருந்தால், நான்..."*

*நீங்கள் சில வாக்கியங்களை எடுத்துக்காட்டாக கூறி விளக்கலாம்.*

*"'பிரைஜைல் ஃபோரஸ்ட்' காட்டிற்கு நான் அரசனாக இருந்தால், நான் இக்காட்டின் வெப்பத்தைத் தணிக்க, காட்டின் நடுவே ஏரி ஒன்றை வெட்டுவேன்."*

*"'பிரைஜைல் ஃபோரஸ்ட்' காட்டிற்கு நான் அரசனாக இருந்தால், பறக்கும் நரியை நான் இக்காட்டிலிருந்து ஒட்டு மொத்தமாக விரட்டியடித்து ஒழிப்பேன். ஏனெனில்..."*

© Singapore Zoo 2020

# பயணத்திற்குப் பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 1: விலங்குகள் குறித்த பழமொழிகள்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்: • எழுதுதல் • கற்றவற்றைப் பயன்படுத்துதல்**

- விலங்குகளைச் சார்ந்த சில பழமொழிகளை உங்களுடைய வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள் (எ.கா. யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்)

- விலங்குகளைப் பற்றிய ஏழு தமிழ் பழமொழிகளின் முதல் மற்றும் இரண்டாம் பாதிகளுடன், விலங்குகளின் படங்களை, மாணவர்களை இணைக்க வையுங்கள். சிறிய குழுக்களில், மாணவர்கள் பழமொழிகளின் பொருளை ஊகித்து, அதைக் குறித்து கலந்துரையாடுவர்.

1) யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்

2) யானைக்கும் அடி சறுக்கும்

3) எறும்பு ஊர கல்லும் தேயும்

4) தாய் புலி எட்டு அடி பாய்ந்தால் குட்டி புலி பதினாறு அடி பாயும்

© Singapore Zoo 2020

5) வீட்டில் எலி வெளியில் புலி


6) திருடனுக்கு தேள்
கொட்டியது போல்

7) குரங்கு கையில் பூமாலை கொடுத்தது போல்

© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020




© Singapore Zoo 2020 





© Singapore Zoo 2020



Mouse

# Scorpion






© Singapore Zoo 2020

# பயணத்திற்குப் பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: விலங்குகளைப் பற்றிய விவாதம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 5 - 6**

**திறன்கள்: • பேசுதல் • ஆராய்தல்/ சீர்தூக்கிப் பார்த்தல்**

உங்களுடைய வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, பின்வருபவற்றைப் போன்ற, சிந்தனையைத் தூண்டக்கூடிய விவாதத் தலைப்புகளை ஒட்டி அவர்களை விவாதம் புரிய வையுங்கள்

— *இந்த உலகத்தில் விலங்குகள் தேவையில்லை*

— *விலங்குகளும் மனிதர்களும் ஒருவரையொருவர் சார்ந்துள்ளனர்*

ஒரு குழு தலைப்புக்கு ஆதரவாகவும், மற்றொரு குழு தலைப்பை எதிர்த்தும் பேசுவர்.

© Singapore Zoo 2020

# பயணத்திற்குப் பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: சுவரொட்டி வடிவமைப்பு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 4 - 5**

**திறன்கள்: • எழுதுதல்**

பின்வரும் தலைப்புகளை ஒட்டி, ஒரு மையத் தலைப்பையும், ஐந்து சிறு வாக்கியங்களையும் உள்ளடக்கிய சுவரொட்டி ஒன்றை வடிவமைக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்:

1) இந்த கற்றல் பயணத்தில் அவர்கள் பார்த்த ஏதாவது ஒரு கண்காட்சி
2) விலங்கு பாதுகாப்பு முயற்சிகள்
3) சிங்கப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வனவிலங்குகளைப் பாதுகாத்தல்

© Singapore Zoo 2020